முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : செல்வி. **N.** திலகேஸ்வரி**, B.Sc., LL.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி **(**மு**.**கூ**.**பொ**),**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**,** ஆத்தூர்**.**

2023-ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 22-ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**I.A. No. 6 of 2023**
**in O.S. No. 169 of 2002**
**(CNR No. TNSA-1300-00152-2002)**

கதிர்வேல் .. மனுதாரர் / வாதி

எதிராக

1. சித்ரா
2. துரைசாமி (இறந்துவிட்டார்)
3. அருண் பாண்டியன் .. எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 07.09.2023-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர் /வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V.R. ராஜேந்திரமகஜன் அவர்கள் ஆஜராகியும், 2-ஆம் எதிர்மனுதாரர் / 2-ஆம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 1, 3 -ஆம் எதிர்மனுதாரர்கள் / 1, 3-ஆம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் R. ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

உத்தரவுரை

மனுதாரர் / வாதி இம்மனுவை அசல் வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் : மனுதாரர் / வாதி தன் மனுவில் தான் அசல் வழக்கினை செயலுறுத்துகட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்திருந்ததாகவும், நீதிமன்ற ஆணையர் அளவையர் உதவியுடன் தாவா சொத்தை அளவீடு செய்து தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்திலும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாவா சொத்தில் 14.6 அடி X 36 அடிகள் அளவுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எனவே இந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு தாவா வழக்கரையில் திருத்தம் செய்யவேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார்.

3. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

4. 3-ஆம் எதிர்மனுதாரர் தாவாவில் குறிப்பிட்டுள்ள தவறான அளவுகளின் படிதான் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் / வாதி தவறான சொத்து விவரங்கள் குறிப்பிட்டு அசல் வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், வருவாய் துறை ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள அளவுகளின் படிதான் வாதிகளின் வீடும், பிரதிவாதிகளின் வீடும் அமைந்திருப்பதாகவும், தாவா தாக்கல் செய்து 21 ஆண்டுகள் கழித்து வழக்குரையில் திருத்தம் செய்ய கோருவது ஏற்கக்கூடியது அல்ல என்றும், வாதியை ஏற்கனவே வழக்கில் சாட்சியாக விசாரணை செய்த பிறகு வழக்குரையை திருத்தம் செய்வது ஏற்கக்கூடியது அல்ல என்றும், தாவா சொத்தில் மனுதாரர் / வாதிக்கு உரிமை இருப்பது சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் ஒப்படைக்காமல் வழக்கை திருத்தம் செய்ய அனுமதிக்கக்கூடாது எனவும் கூறியுள்ளார். அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனுதாரர் / வாதி அசல் வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்பதும், அதில் பிரதிவாதிகள் தனக்கு சொந்தமான சொத்தில் 9 அடி X 36 அடி என்ற அளவில் கட்டியுள்ள கட்டுமானத்தை அகற்றகோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியுள்ளார் என்பதும் தெரியவருகிறது. மனுதாரர் / வாதி இம்மனுவில் நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கை மற்றும் வரைபடத்தில் 14.6 X 36 அளவில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அறிக்கை

தாக்கல் செய்திருப்பதாகவும், அதன்படி வழக்குரையில் பத்தி எண் 8லும் பரிகார பத்தியிலும் திருத்தம் செய்யவேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளார். அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தினை பரிசீலனை செய்ததில் 14.6 அடி X 36 அடி அளவில் வாதியின் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார் என்பது தெரியவருகிறது. எனவே மேற்படி அளவீடுகளின்படி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு வாதிக்கு உரிமையுள்ளதாகவவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் ஏற்கனவே வழக்கைகுரையில் மனுதாரர் / வாதி 9 அடி X 36 அடி என்று குறிப்பிட்டுள்ள அளவில்தான் தற்போது திருத்தம் செய்ய மனுதாரர் / வாதி கோரியுள்ளார். மேலும் ஏற்கனவே மனுதாரர் / வாதி கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளைத்தான் திருத்தம் செய்ய மனுதாரர்/ வாதி கோரியுள்ளார். வழக்கின் விசாரணை இன்னும் முடிவடையாத நிலையில் உண்மையிலேயே பிரதிவாதிகளால் தாவா சொத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து இம்மனுவில் முடிவு செய்ய இயலாது. அது குறித்து வழக்கின் இறுதியில் தான் இரு தரப்பு சாட்சியங்களின் அடிப்படையில் முடிவு செய்ய இயலும், இருந்தபோதிலும் அசல் வழக்கானது ஆக்கிரமிப்பை அகற்றகோரும் செயலறுக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளின்படி தாவா வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. உண்மையிலேயே ஆக்கிரமிப்பு உள்ளதா மனுதாரர் / வாதி குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் சரியானதா வாதிக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளதா என்பது குறித்து இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய அவசியமில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சங்கதிகள் குறித்து வழக்கின் இறுதி தீர்ப்பில் தான் முடிவு செய்ய இயலும். எனவே இரு தரப்பினருக்கும் ஏற்பட்டுள்ள தாவா பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு மனுதரர் / வாதி மனுவில் குறிப்பிட்டுளள வழக்குரையின் திருத்தமானது அவசியமென்றே கருதி இந்நீதிமன்றம் இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்க முடிவு செய்திறது.

இறுதியாக இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதிக்க உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 22-ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி **(**மு**.**கூ**.**பொ**),**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**,** ஆத்தூர்**.**
ஆத்தூர்**.**

<u>மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள்</u> : இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u> : இல்லை

<u>மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> : இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் </u>: இல்லை

<u>நீதிமன்ற சாட்சிகள் </u>: இல்லை
<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி **(**மு**.**கூ**.**பொ**),**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**,** ஆத்தூர்**.**
ஆத்தூர்**.**

<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்.</u>
இ.ம.வ. எண் **6/2023**
---------------
அ.வ. எண் **169**/2002
அசல் / வரைவு உத்தரவுரை
நாள் : 22.09.2023.